(துர்க்கா)

# பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு குறி வைத்திருக்கிறார்

# பேட்மிண்டன் வீராங்கனை கிஷோனாவுக்கு மேட்ரிக்ஸ் நிறுவனம் ஒரு லட்சம் வெள்ளி

கோலாலம்பூர், மார்ச் 16-

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி உட்பட பல்வேறு அனைத்துலக போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிகளை குவிக்க மலேசிய பேட்மிண்டன் வீராங்கனை எஸ். கிஷோனா லட்சியம் கொண்டிருக்கிறார்.

உலக பூப்பந்து தரவரிசையில் முதல் 20 இடங்களை பிடிப்பதற்கு கடுமையாக பயிற்சியை மேற்கொண்டு வரும் கிஷோனாவிற்கு தொழில் துறை மேம்பாட்டு நிறுவனமான மேட்ரிக்ஸ் 1 லட்சம் வெள்ளி நிதி உதவி




** கிஷோனாவிடம் நிதியை வழங்குகிறார் டத்தோஸ்ரீ லீ தியான் ஹோக்

வழங்கியது.

கோலாலம்பூர் புக்கிட் கியாரா அகாடமி பேட்மிண்டன் கல்லூரி, 2ஆவது தளத்தில் நடைபெற்ற ஆதரவு வழங்கும் விழாவில் மேட்ரிக்ஸ் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டத்தோஸ்ரீ லீ தியான் ஹோக் இந்த நிதியை கிஷோனா செல்வதுரையிடம் ஒப்படைத்தார். உலக பூப்பந்து தரவரிசையில் முதல் 20 இடங்களை பிடிப்பதே எனது இலக்கு என்று தேசிய பூப்பந்து வீராங்கனை கிஷோனா நம்பிக்கையுடன் தெரிவித்தார்

சுவிட்சர்லாந்து பொது பூப்பந்துப் போட்டி இம்மாத இறுதியில் தொடங்க உள்ளதால் இப்போட்டியின் சவால்களை எதிர்கொள்வதற்காக கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறேன் என்றார் அவர்.

தற்போது எனக்கு முஹம்மத் ஷுக்ரி அப்துல் லத்திப் பயிற்சியாளராக பொறுப்பு ஏற்று அவருக்கு துணையாக முஹம்மத் அரிப் அப்துல் லத்திப் இருக்கும் அதே வேளையில் ஆடவர் அணியுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் விளக்கினார். அந்த அணியில் தான் மட்டுமே பெண் என்பதால் பயிற்சிகள் சற்று கடினமாக இருந்தாலும் நல்ல அனுபவத்தின் மூலம் உலக பூப்பந்து தரவரிசையில் முதல் 20 இடங்களுக்குள் வர கடைசி வரை போராடுவேன் என்று கிஷோனா கூறினார்.

இதனிடையே கிஷோனாவின் பூப்பந்து மேம்பாட்டிற்கு உதவ மேட்ரிக்ஸ் நிறுவனம் 1 லட்சம் வெள்ளி நிதி வழங்கும் நிகழ்ச்சியில் மேட்ரிக்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் டத்தோஸ்ரீ லீ தியான் ஹோக், மலேசிய பூப்பந்து சம்மேளனத்தின் தலைவர் டான்ஸ்ரீ முகமட் நோர்சா ஜக்காரியா, கிஷோனாவின் தந்தை செல்வதுரை உட்பட பல பொறுப்பாளர்களும் பங்கெடுத்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.